மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களில் தாங்கள் வாழும் இடத்திற்கு/மனைக்கு நில உரிமம் பெற்றவர்களுக்கு அவர்களது வீடுகளைத் தாங்களாகவே கட்டிக்கொள்ள ரூபாய் 2.10 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகையினைக் கொண்டு பயனாளிகள் தங்களது வீடுகளை அவர்களே கட்டிக்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் விடுவிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு, பேரூராட்சி இயக்குநரகத்தால் பயனாளிகளுக்கு 300 சதுர அடி கட்டட பரப்பளவிற்குக் குறையாமல் வீடுகள் கட்டிக்கொள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***40543—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியம், வீரணாமூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 12]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியம், செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வீரணாமூர்–1 முழுநேர நியாய விலைக் கடை 609 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்திலும், வீரணாமூர்–2 பகுதிநேர நியாய விலைக் கடை 398 குடும்ப அட்டைகளுடன் வாடகையின்றி பஞ்சாயத்துக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இந்தக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற வீரணாமூர் கிராமத்தில் எண் 1 மற்றும் எண் 2 என்ற இரண்டு நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கடை எண் 1 அரசு கட்டடத்தில் இயங்குவதாகவும், கடை எண் 2 பஞ்சாயத்துக் கட்டடத்தில் இயங்குவதாகவும் தெரிவித்தார்கள். எனவே, அங்கு கட்டடம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியுள்ளார்கள்.*

வீரணாமூர் எண் 1 நியாய விலைக் கடை, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காகக் கட்டப்பட்ட கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கிருக்கிற மக்களுக்கு பொழுதுபோக்கிற்காக அமைக்கப்பட்ட தொலைக்காட்சி அறையில், தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்து வைத்துவிட்டு, எண் 2 கடை இயங்கிக் கொண்டிருக்கிறது. மகளிருடைய மேம்பாட்டிற்காகவும், அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும், அவர்கள் சுய தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சுய காலில் நிற்க வேண்டும் என்பதற்காகவும், பொருளாதார பாதுகாப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும், மாண்புமிகு கலைஞர்

அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கினார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய தலைவர் அவர்கள் அனைத்து குழுக்களுக்கும் சுழல் நிதியை கொடுத்தார்கள். ஆனால், இப்போது வீரணாமூர் கிராமத்தில் 14 சுய உதவிக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாதாந்திரக் கூட்டங்கள் நடத்துவதற்கோ, ஆலோசனை செய்வதற்கோ, கடன் கொடுப்பதற்கோ, கொடுத்த கடனைப் பெறுவதற்கோ சுய உதவிக் குழுக்களுக்கென்று கட்டடம் இல்லாத காரணத்தினால், அவர்கள் வீட்டிலேயே முடங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதியதாக அங்கு இரண்டு கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து, இப்போது பயன்பாட்டில் இருக்கிற கட்டடங்களை எந்தப் பயன்பாட்டுக்காக அவை கட்டப்பட்டனவோ அதற்கே ஒப்படைப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

வீரணாமூர் கிராமம் மட்டுமல்ல, என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஏறத்தாழ 27 கிராமங்களில், அதாவது வல்லம் ஒன்றியத்தில், நாட்டார்மங்கலம், மேல்அத்திப்பாக்கம், வடபுத்தூர், தைத்தாம்பட்டி, கண்டமநல்லூர், அருகாவூர், ஈச்சூர், தொண்டூர், கல்லடிக்குப்பம், தளவாலப்பட்டு, வடதரம், கீழையூர், மயிலம் ஒன்றியத்தில் கொடிமா, முப்புளி, இளமங்கலம், பெரமண்டூர், தீவனூர், ஒலக்கூர் ஒன்றியத்தில் புறங்கரை, கொடியம், நெய்குப்பி, வடசிறுவளூர், மாம்பாக்கம், கீழ்காரணை, சாத்தனூர், செம்பாக்கம் போன்ற கிராமங்களில் நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில், பஞ்சாயத்து கட்டடங்களில், நூலகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, இதை அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, எங்கெல்லாம் நியாய விலைக் கடைகள் இப்படி சொந்தக் கட்டடங்களில் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ அவற்றிற்கெல்லாம் ஒரு சிறப்பு நிதியை ஒதுக்கி, அந்தக் கடைகளுக்குக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் தற்போது முழுநேர நியாய விலைக் கடையும், பகுதிநேர நியாய விலைக் கடையும் நடப்பதாகவும், இரண்டு கட்டடங்களுமே எந்தக் காரணத்திற்காக, எந்த நோக்கத்திற்காகக் கட்டப்பட்டனவோ அவை நிறைவேறவில்லை; எனவே, புதியதாக இந்த 2 கடைகளையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது நல்ல கருத்துதான். இருந்தாலும்கூட ஒன்றை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு நிதி ஆதாரமில்லாதவையாக இருக்கின்றன. விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதியில் அமைந்திருக்கின்ற வல்லம் ஒன்றியம், மேல்ஒலக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 13 முழுநேரக் கடைகளையும், 2 பகுதிநேரக் கடைகளையும் நடத்தி வந்தது. இந்தக் கடைகளை நடத்த முடியாததால், உங்கள் ஆட்சிக் காலத்திலேயே அந்தச் சங்கங்கள் எல்லாம் நலிந்துபோனதால் அங்கிருக்கிற செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் இந்தக் கடைகளையெல்லாம் 2001–லிருந்து ஏற்று, இப்போது 44 கடைகளை நடத்திக் கொண்டிருக்கின்றது. எதற்காக இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால், சங்கங்களுடைய நிதி ஆதாரம் மிகக் குறைவாக இருக்கிறது. புதிய கட்டடங்களைக் கட்டுவது என்பது சங்கத்தால் இயலாது. சங்கத்திற்குச் சொந்தமாக இடங்கள் இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி, ஊராட்சி முகமை நிதி மற்றும் அரசினுடைய சிறப்புத் திட்டத்தின் மூலமாக நிதி பெற்றுத்தான் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அந்தப் பகுதியிலே சங்கத்திற்கு சொந்த இடம் இருக்கும்பட்சத்திலே, நீங்கள் நிதி கொடுத்தீர்களென்றால், புதிய கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். நிச்சயமாக அரசுத் துறை சார்பாகப் பரிசீலித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு*

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட செம்பாக்கம் ஊராட்சியில் ஒரு முதன்மைக் கடை இருக்கிறது. அங்கிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் மோட்டூர் துணை கிராமம் இருக்கிறது. அந்த துணை கிராமத்தில் பஞ்சாயத்து பொது நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய்க்கு புதிதாக ஒரு நியாய விலைக்கடை கட்டடம் கட்டப்பட்டு, கடந்த 5 ஆண்டுகாலமாக அந்தக் கட்டடம் திறக்கப்படவும் இல்லை. அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும் இல்லை. அது இப்போது ஊராட்சியினுடைய கட்டுப்பாட்டிலும் இல்லை. கூட்டுறவுத் துறை அதைக் கையகப்படுத்தவும் இல்லை. அப்படிப்பட்ட கையறு நிலையில்தான் அந்தக் கட்டடம் இன்றைக்கு காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில், அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற பகுதிநேரக் கடைகளை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பகுதிநேரக் கடைகளை அமைக்க வேண்டும் என்பது என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கோரிக்கை இருக்கிறது. முதன்மைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; கிளைக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று நீங்கள் விதிகளைச் சொல்கிறீர்கள். எனவே, நீங்கள் அமைச்சராக இருக்கிறபோதே, இந்த விதிமுறைகளை எல்லாம் தளர்த்தி, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை மட்டும் பார்க்காமல், அந்தக் கிராமத்திற்குள்ள தூரத்தையும், அந்த மக்கள் படுகின்ற சிரமங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, குடும்ப அட்டைகள் சற்றுக் குறைவாக 100, 120, என்று இருந்தாலும்கூட, பகுதிநேரக் கடைகளை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டூர் கிராமத்திலே ஒரு நியாய விலைக் கடை கட்டப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். கட்டப்பட்டதெல்லாம் வாஸ்தவம்தான். 276 குடும்ப அட்டைகள் தாய்க் கடையில் இருக்கின்றன. அதிலிருந்து 125 குடும்ப அட்டைகளைப் பிரிக்கின்றபோது, தாய்க்கடையில் 151 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். குறிப்பாக, இது எங்கள் ஆட்சிக் காலத்தில் இல்லை. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 2009–2010–ல் அப்போதே ஊராட்சி முகமை நிதியிலிருந்து கட்டப்பட்டதனால், அன்றைக்கிருந்த மாண்புமிகு அமைச்சர்கள் அதைத் திறக்கவில்லை. ஆனால், இப்போது என்ன பிரச்சினையென்றால், மோட்டூர் கிராம மக்கள் ஓர் ஏரியைத் தாண்டி வர வேண்டியிருக்கிறது. மழைக் காலங்களில் வருவதற்கு சிரமப்படுகிறார்கள். கிளைக் கடையில் 125 குடும்ப அட்டைகள் இருந்தாலும் பரவாயில்லை, தாய்க் கடையில் 151 குடும்ப அட்டைகள் இருந்தாலும் பரவாயில்லை. அந்தக் கடையை எப்படியாவது திறந்தாக வேண்டுமென்று துறை ரீதியாக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையும் பெற்று, அதிவிரைவில் அந்தக் கடையைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

இது உங்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு, உங்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே திறக்காமல் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இதிலிருந்து அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், இதுபோன்று நிதியின் மூலமாகக் கட்டப்படுகிற நியாய விலைக் கடைகள் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கின்றபோது, எங்கள் துறையைச் சார்ந்த

அந்த மாவட்டத்தினுடைய இணைப் பதிவாளரிடம் நீங்கள் கலந்தாலோசித்து, எங்கே கட்டலாம் என்பதை அறிந்து, யாராவது நிதி கொடுப்பவர்கள் இருந்து, கட்டுவதற்கு முன்வருவீர்களானால், உரிய இடத்தில் கட்டிக் கொடுத்து, அந்தப் பகுதி மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்துகொள்ளலாம். ஏற்கெனவே, உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்கூட அவருடைய தொகுதியில், ஒரு கடை கட்டப்பட்டு, நீண்ட நாட்களாகத் திறக்கப்படவில்லை என்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அதைப்போன்று, உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்களும் சொன்னார். இதற்குக் காரணம் என்னவென்றால், அந்தப் பகுதி மக்கள் சில கடைகளுக்குப் போகமாட்டேன் என்கிறார்கள்; மறுக்கிறார்கள். அந்த இடம் வெகுதூரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, இந்தக் காரணங்களினால்தான் அந்தக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அதிவிரைவில், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி ஆகியோரின் கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, துறை ரீதியாக ஆய்வு செய்து, நிச்சயமாக அந்தக் கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள் இங்கு அவருடைய தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் மற்றும் வாடிப்பட்டி பேரூராட்சிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருந்தார். நான் பொதுவாக அந்த வீடுகளைப் பெறுவதற்கு யாரெல்லாம் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தை மட்டும் சொன்னேன். அவர் இன்றைக்கு வரவில்லை. அதனால் துணைக் கேள்வி கேட்பதற்கான வாய்ப்பில்லை. எனவே, அதற்கடுத்த கேள்விக்கு சென்றுவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. வாடிப்பட்டி பேரூராட்சியில் 380 வீடுகளும், அலங்காநல்லூர் பேரூராட்சியில் 239 வீடுகளும், ஆக மொத்தம் 619 வீடுகள் அந்த இரண்டு பேரூராட்சிகளிலும் கட்டுவதற்குத்*

2019 ஜூலை 12]

திட்ட மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டு பேரூராட்சிகளையும் சேர்த்து 65 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 554 வீடுகளின் பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன என்பதையும், இதற்கான திட்டச் செலவினம் 3 கோடியே 89 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

புதைவடங்கள்

***12632—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைவடத் தடமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். தாம்பரம் கோட்டத்தில் மொத்தம் 311 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர் மின்னழுத்த கம்பிகள் உள்ளன. உறுப்பினர் தொகுதியில் 102 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கின்றன. அதேபோல, தாழ்வழுத்த மின்கம்பிகள் தாம்பரம் கோட்டத்தில் 918 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கின்றன. உறுப்பினர் தொகுதியில் 435 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கின்றன. (குறுக்கீடு) தாம்பரம் எல்லாம்